# திரப்பனை பிரதேச சபை
# அனுராதபுர மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரில் 1 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 9 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திரப்பனை பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா. 645,600 ஆக இருந்தும் வரவு செலவுக் கணக்கில் வருமானம் ரூபா. 700,831 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 55,231 அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வருமானங்கள் மட்டும் வருமான செலவு கணக்கிற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் முன்னைய வருடங்களுக்கான பெறுகைகள் மற்றும் சம வருடத்திற்கான பெறுகைகளை வெவ்வேறாக இனங்காண முடியுமானவாறு ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். | 2018 வருடத்தின் கடை வாடகைகள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 645,600 ஆக காணப்பட்டதுடன், முன்னைய வருடங்களில் அறவிடப்படாத நிலுவை கடை வாடகை தொடர்பாக அறவிடப்பட்ட ரூபா. 55,231 தாமதமாக செலுத்தப்பட்ட கட்டணம் இந்தக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் கட்டணம் தொடர்பாக மானியங்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கான கணக்கீட்டுக் கட்டணம் தொடர்பாக மானியங்கள் வேறாக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான கணக்கீட்டுக் கட்டணம் ரூபா. 100,000 ஆன தொகை வரவு செலவு ஆவணத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | மீளாய்வாண்டின் முத்திரை வரி வருமானம் எண்ணப்பட்டு கணக்காக்கப்பட்டிருக்கவில்லை. | சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடம் விசாரணை செய்து அறவிடப்பட வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு ஆண்டிற்குரிய வருமானம் கணக்காக்கப்பட வேண்டும். | பதிவாளர நாயகம் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய முத்திரை கட்டணம் எண்ணப்பட்டு சபையிடம் அறிவிக்கப்பட முடியுமாவது அதற்கடுத்த வருடமாகும். 2018.03.31 திகதிக்கு நிதிக் கூற்றுகள் தயார் செய்யப்பட்டு இறுதியாகும் போது அந்த epg; பெறுமதி சபைக்கு கிடைக்க பெற்றிருக்கவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

----------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------ | ----------------------- | -------------------------------- |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப் பட்டிருந்ததால் ரூபா. 39,040,932 ஆன 2 கணக்கு மீதிகள் பிரதி ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் ரூபா. 39,040,989 என குறிப்பிட பட்டிருந்ததால் ருபா. 60,049 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சம்மந்தப்பட்ட மீதிகளிலுள்ள வித்தியாசங்கள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காட்டித் தரப்பட்டிருக்கும் கணக்கீடுகளில் உள்ள வித்தியாசம் உண்டாகியிருப்பது கணினிமயப்படுத்தப்படும் போது ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக காரணமாகவாகும். |
| (ii) | பிரதேச சபையின் நிலையான சொத்து ஆவணத்தில் ரூபா. 3,584,700 ஆக குறிப்பிடப்பட்டிருந்த மோட்டார் வாகனம் மற்றும் தள்ளு வண்டிகளின் பெறுமதி மீளாய்வாண்டின் ஐந்தொகையில் ரூபா. 11,437,366 என குறிப்பிடப்பட்டிருந்ததால் சொத்துக்களின் பெறுமதிகளில் ரூபா. 10,066,526 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சம்மந்தப்பட்ட மீதிகளிலுள்ள வித்தியாசங்கள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் புலப்படும் பெறுமதிகளுடன் தொடர்பான சரியான தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி தயார் செய்யப்படும் நிதிக்கூற்றுக்களின் மூலம் சீர் செய்யப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் வாடைகைக்கு கொடுப்பதன் மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானம் தகுந்த கணக்கில் ரூபா. 934,861 ஆக | சம்மந்தப்பட்ட மீதிகளிலுள்ள வித்தியாசங்கள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களின் மூலம் கிடைத்த வருமானம் நாலதுவகையாக்கல் செய்யப்பட பிரிவுக்குப் பொறுப்பான |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்டிருந்ததுடன் வருமான பிரதி ஆவணத்தின் படி ரூபா. 246,000 என குறிப்பிட பட்டிருந்ததால் ரூபா. 688,861 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | | உத்தியாகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

**(இ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி 4 தொடக்கம் 5 வருடக்காலமாக நிதிக்கூற்றுக்களில் நிலவி வந்த ரூபா. 931,791 ஆன 7 கணக்கு மீதிகள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய மீதிகள்அறவவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | அம் மீதிகளை நிதிக்கூற்று களிலிருந்து அகற்றுவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தின் மேற்பார் வையின் கீழ் அறிவுரைகளை பெற்றுக்கொண்டு தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி 3 தொடக்கம் 5 வருடஙகளுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் நிலவி வந்த ரூபா. 1,710,681 ஆன 5 கணக்கு மீதிகள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அம் மீதிகளை நிதிக்கூற்று களிலிருந்து அகற்றுவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தின் மேறபார்வையின் கீழ் அறிவுரைகளை பெற்றுக் கொண்டு தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுமதி ரூபா. 71,986,857 ஆன 9 கணக்குப் பிரிவுகளுடன் தொடரபுபட்ட சொத்து ஆவணங்கள், உரிமைச் சான்றிதல்கள், காலப் பகுப்பாய்வு மற்றும் விவரமான பிரதி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்கீட்டடின் போது அவற்றை திருப்திகரமாக சரி பார்க்க முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிக்கப்பட்டிருக்கும் பெறுமதி உறுதிபடுத்திக்கொள்ள தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து அறவுரைகளை பெற்றுக்கொண்டு சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி கணக்கின்படி வாகனங்களை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா. 934.,861 என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவ் வருமானத்தை உறுதி செய்துகொள்ள சட்ட ரீதியான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் சபையின் மூலம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி கூற்றுகளில் புலப்படும் வருமானத்தை உறுதி செய்ய தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | வாகன வாடகை பெற்றுக் கொடுப்பதற்கான சம்மந்தப்பட்ட ஆவணங்களை சரியாக சட்டப்படி நடாத்திச் செல்வதற்கு பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா. 76,737,005 பெறுமதியுடைய நாடகுறிப்புடன் தொடர்புபட்ட மீதிகள் உறுதி செய்யப்பட சம்பந்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியாக அனுமதியை பெற்றுக்கொண்டு நாட்குறிப்பில் பதிவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு விசாரணை தொடர்பாக சம்பந்தப்பட்ட எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட சிரமமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | | | |
| (i) | 33 ஆம் விதி | வீதவரி கொடுப்பனவை நிராகரிப்போர் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்துக்களை தடை செய்யும் பிடியாணை பத்திரப் பட்டியல் ஒவ்வொரு காலாண்டு நிறைவிலும் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில் லை. | விதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒவ்வொரு காலாண்டுகளின் நிறைவின் போதும் ஆவணங்கள் சமப்படுத்தபடும். அதன் மீதிக்கு அமைய பணம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, இது வரையில் இப் பிரதேச சபை சொத்துத் தடை விதித்தலை மேற்கொண்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 217 ஆம் மற்றும் 218 விதி | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 பிரகாரம் பதிவேடொன்று பராமரிக்கப்படாததோடு சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்களை வருடத்திற்கு ஒரு முறை பரிசோதணை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறித்த சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645 | சபையின் வாகனங்களுக்கு சம்மந்தமான ஒவ்வொரு மாதத்தின் ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்சம் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வாலரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்சம் தயாரிக்கப்படும் போது சாரதிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி எதிர்காலத்தில் குறிக்கப்பட்ட திகதியில் அறிக்கைகள் சமர்பிக்கப்படும். |
| (இ) | அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயளாலரின் 2016 டிசம்பர் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 7 வாகனங்கள் தொடர்பான எரிபொருள் தகன பரிசோதணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தொழிநுட்ப உத்தியோகத்தினர் அறிவிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் சரியான முறையைப் பின்னபற்றி சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | திறைசேரிச் செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/2 திரைசேரிச் சுற்றறிக்கை | கணிணி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் சம்மந்தமாக நிலையான சொத்துக்களுக்கான பிரிதோர் சொத்துக்கள் | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணிணி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் சம்மந்தமாக நிலையான சொத்துக்களுக்கான் பதிவேடொன்று எதிர்காலத்தில் தயாரிக்க |

| | | |
|---|---|---|
| | பதிவேடொன்று கையாளப்பட வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 928,671 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 913,037 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,141,878 | 1,147,957 | 1,132,622 | 735,092 | 919,058 | 1,033,378 | 313,621 | 719,757 |
| (ii) | வாடகை | 4,568,450 | 3,245,355 | 3,466,439 | 1,392,347 | 4,120,800 | 2,756,850 | 1,143,419 | 1,613,431 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,237,460 | 1,528,185 | 1,528,185 | 66,040 | 1,530,375 | 1,126,848 | 1,060,808 | 66,040 |
| (iv) | ஏனைய வருமானம் | 23,753,771 | 20,192,863 | 19,610,441 | 3,055,303 | 22,042,000 | 16,265,507 | 13,792,626 | 2,472,881 |
| | மொத்தம் | 31,701,559 | 26,114,360 | 25,737,687 | 5,248,782 | 28,612,233 | 21,182,583 | 16,310,474 | 4,872,109 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபை அதிகாரப் பிரதேசத்தின் 146 சொத்துக்களில் அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா. 248,422 | விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மொத்த நிலுவைத் தொகையில் ரூபா. 52,192 பணம் பிரதேச சபை கட்டிடங்களினால் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் |

| | | |
|---|---|---|
| வீதவரியும் வரியும் நிதி மற்றும் நிருவாக விதி 32 42 இன் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | தொகையாகும். இநதத் தொகையானது எதிர்காலத்தில் மகா சபையின் அங்கீகாரத்தோடு உள்ளூராட்சி திணைக்களத்தின் அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டு கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். எஞ்சியுள்ள நிலுவைத் தொகையை இந்த வருடத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை கடை வாடகை வருமானமான ரூபா. 1,794,360 ஐ அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்கள் ஆறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.05.13 திகதியாகும் போது இந் நிலுவை தொகையில் ரூபா. 320,982 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய நிலுவை தொகையை 2019.05.31 திகதியாகும் போது செலுத்தி நிறைவு செய்யுமாறு கோரிக்கை விடுத்து கடை உரிமையாளர்களிடம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட்டு சபையின் நடவடிக்கைகளை பயனுள்ளவாறு செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சிமன்ற நிறுவனம் உப விதிகளை தயார் செய்து வர்த்தமானியில் அறிவித்ததை பின்பற்றிய பின்பு அந்த உப விதிகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சம்மேளனம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் குறித்து சபை மீளாய்வாண்டிலும் அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நியாயப் பத்திரம் 2030 இற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுவதற்கு போதுமான பணம் சபையிடம் இல்லாது இருந்தமையும் குறைந்த வருமானம் ஈட்டும் சபையாக இருந்தமையாலும் இவ் அபிவிருத்திச் இலக்குகள் செயற்படுத்தப்பட முடியாமல் உள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் சபைக்குச் சொந்தமாக இருந்த ருபா. 71,390,690 பெறுமதியான சொத்துக்கள் இனங்காணப்படாது இருந்ததுடன் அந்த சொத்துக்களின் பௌதிக நிலை வெளிக்காட்டப்படாதிருந்தது. | குறிப்பிட்ட பெறுமதிகளுடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் அவற்றின் பௌதிக நிலை கண்டரியப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பழைய நிதிக்கூற்றில் காட்டப்படும் இந்த மீதி சம்பந்தமான பிரதி ஆவனங்களை கண்டுபிடிக்க முடியாது இருந்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் 'புற நெகும' செயற்திட்டத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்களுக்கு மட்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டுடன் தொடர்புபடைய ருபா. 214,773,794 பெறுமதியான 58 நாற்குறிப்புகளிற்காக எந்த வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாது | அனைத்து நாற்குறிப்புகளும் அங்கரீக்கரிக்கப்பட வேண்டியதோடு | எதிர்காலத்தில் நாற்குறிப்புகளுக்காக அனுமதியை பெற்றுக்கொள்ள |

| | | |
|---|---|---|
| கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கமைய கணக்கு வைப்பிலிடல் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் முறையாக மேற்பார்வையாளர்களினால் செய்யப்பட்டிருக்கவில்லை. | உறுதி செய்யப்பட வேண்டியதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வேண்டுமென உதவிக் கணக்கு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையின் சேவைகளுக்கான 11 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 3 மேலதிகமான பதவிகளும் காணப்பட்டன. | சேவை வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 3 மேலதிகமான பதவிகளிற்காக இருந்த சேவையாளர்கள் 2017 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றம் நடைபெறும்போது மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டிருந்த சேவையாளர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாதிருத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் 6 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதோடு இந்த வாகனங்களை புதுப்பித்து பாவணைக்கு எடுக்க அல்லது நிதி அமைச்சின் 2015 ஜுலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கையகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பித்து பாவணைக்கு எடுக்கவோ அல்லது அகற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் மோட்டார் சைக்கிள் மற்றும் டிரக்டர் வண்டி இந்த வருடத்தில் பொருட்கள் மதிப்பாய்வு நடவடிக்கைகள் நிறைவு பெற்றபின் மதிப்பீட்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு சமர்பிக்கப்பட்டு மதிப்பீடொன்றை பெற்றுக்கொண்டு கைதவிர்ப்பு நடவடிக்கைகள் எடுப்பதுடன் முச்சக்கர வண்டி, ப்லேட் ரோல் என்பன இயந்திரப் பொரியியளாலரின் கண்கானிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1)(i) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டீஎம்ஏ/2009(1)(1) ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். |